௧௦௩. அங்ஙனமே பரமாத்தனாகிய சிவனாற் செய்யப்பட்டமையாற்றானே வேதம் பிரமாணமாவது. வேதத்துக்கும் இறைவனுக்கும் ஒன்றையொன்றுபற்றல் இல்லை; ஒவ்வாத் தொழிலுடைமையின். வேதம் சிவனை உணர்த்துவது, சிவனே வேதத்தை உண்டாக்கினவன்.

௧௦௪. அங்ஙனமாயினும் வேதம்பிரமாணமாதல் இறைவனைநிச்சயித்தல் என்பவற்றிற்கு ஒன்றையொன்றுபற்றல் உளது; வேதம் பிரமாணமாதல் துணியப்படின் அதனால் இறைவனை நிச்சயித்தல்; இறைவனைநிச்சயித்தலுள் வழியே அவனுரைத்தமையால் வேதம்பிரமாணமென நிச்சயித்தல். எனின், இல்லை; பெரியோராற் கொள்ளப்பட்டமையாலே துணியப்பட்ட பிரமாணத் தன்மையையுடையது இறைவனைக்கருத்தாவாகவுடையது என முடித்தல் பொருந்தலின். அல்லது உனக்கும் புருடராற் செய்யப்படாததன்மை பிராமாணியத்தை நிச்சயித்தல் என்பவற்றிற்கும் ஒன்றையொன்றுபற்றலாம் ஆதலானும், புருடராற் செய்யப்படாமையுந் துணியப்பட்ட பிராமாணியத்தை யுடைய வேதத்தால் நிச்சயிக்கப்படுவது. புருடராற்செய்யப்படாமையை நிச்சயித்தலாற்றான் வேதத்தின் பிராமாணியத்தை நிச்சயித்தல். என.

௧௦௫. ஆதலின் வேதமும் பரமசிவனாற் செய்யப்பட்டமையாலே பிரமாணமாதலின் அதுபோலவே ஆகமங்களும் அதனாற்றானே பிரமாணமாதலை முடித்தலில் யாதுங் குற்றமில்லை.

௧௦௬. அற்றேல், இங்ஙனமே உலோகாயதமுதலியனவும் சிவனாற் செய்யப்பட்டமையிற் பிரமாணமாமே எனில், இல்லை; அவைகளும் அவ்வவ் வதிகாரிகளின் வகைபற்றிப் பிரமாணமெனக்கொள்ளப்படுதலின்.

[illegible]

௧௦௭. [illegible]

[illegible]

௧௦௮. [illegible] || இதி.

௧௦௯. [illegible]

அது ஸ்காந்தத்தில்:—

௧0எ. "இனி மார்க்கங்களின் பிரமாணத்தன்மைத் துணிபைக்கூறுவேன். முனிச்சிரேட்டர்களே! நீங்கள் சிரத்தையோடு கேளுங்கள். வேதங்களையும், எல்லாச்சாத்திரங்களையும், புராண பாரதங்களையும், வேதாங்கங்களையும், உபவேதங்களையும், காமிகமுதலிய ஆகமங்களையும், காபாலம் லாகுளம் என்பவைகளையும், அவற்றின் பேதங்களையும், அப்படியே பாசுபதம் சோமம் பைரவம் முதலிய நூல்களையும், அவற்றின் உபபேதங்கள்பற்பலவற்றையும், விட்டுணுவாகமங்களையும், அப்படியே பிரமன் புத்தன் அருகன் முதலியோரின் ஆகமங்களையும், அப்படியே பலவிரிவுகளோடு கூடிய உலோகாயதநூலையும், மிக ஆழ்ந்தபொருளினதாகிய மீமாஞ்சையையும், சாங்கியயோகங்களையும், பலவகைப்பிரிவினவாகிய வேறுசாத்திரங்களையும் முற்றறிவினனாகிய சிவபெருமான் நேரே சுருக்கமாகச்செய்தனன். அச்சிவனுடைய அருளினாற்றானே பிரமா விட்டுணு முதலிய தேவர்களும், சித்தர் வித்தியாதரர் இயக்கர் என்பவர்களும், அப்படியே இராக்கதர் முதலியவர்களும், முனிவர்களும், பெருமையுடைய மனிதர்களும் அவைகளையே விரித்துஞ் சுருக்கியுஞ் செய்தனர். அவைகள் அவ்வவ்வதிகாரிகளின் வகைப்படி பிரமாணங்களாமென்று அறிவுடையோராற் சொல்லப்பட்டன. ஒருவருக்கேயுரியனவல்ல. முனிவர்களே இந்த மார்க்கங்கள் அறிவுடையாராலே தருக்கங்களாற் கெடுக்கப்படுவனவல்ல." என.

அவ்வாறு பாரதத்திலும்:-

௧0அ. "சாங்கியயோகங்களும் பாஞ்சராத்திரமும் வேதங்களும் பாசுபதமும் என்னும் இவைகள் மிக்க பிரமாணங்களாம்; இவை ஏதுக்களாற் கெடுக்கப்படா." என.

௧0௯. மாறுபட்டபொருளுடையனவெல்லாம் பிரமாணமாதல் எங்ஙனம் என்றலுங் கூடாது; செயற்பாலனவாகிய விடயங்களில் அதிகாரிபேதம் பற்றி நிறுத்தலால் விரோதமழிதலின்; பொருள்கண் மாறுபட்டுழி வலியுடையதால் வலியிலது வாதிக்கப்படல் கூடுமாகலின். மேலும் எல்லாமார்க்கங்களும் இறைவனாற் கூறப்பட்டமையினொத்தனவாக, வலியுண்மை வலியின்மைகள் பொருந்துவதெங்ஙனம்? என்றலுமாகாது; கீழாசிரியர்களது தாரதம்மியத்தினாலே வலியுண்மை வலியின்மைகள் பொருந்துதலின். கீழாசிரியர்கள் சிவனாற்செய்யப்பட்ட அவ்வம்மார்க்க நூல்களிற் கூறியபொருளைச் சுருக்கித்தான் விரித்துத்தான் அச்சிவன் கூற்றுக்குமாறாக யாண்டு உணர்த்துகின்றார்களோ ஆண்டு அவ்வசனங்கள் தாற்பரியத்தைத் திரித்துணர்ந்தமை முதலிய காரணத்தாலாயின எனப்படும். யாண்டு விரோதமின்றோ ஆண்டு எல்லாம் பிரமாணமாம்.

௧௧0. [illegible]

௧௧௧. [illegible]

௧௧௨. [illegible]

௧௧௩. [illegible]

கக0. வாமமுதலியவற்றிற்குக் கிழாசிரியர் இன்மையின் அவை பிரமாணமாம் என்றலுங்கூடாது; "இவ்வுலகத்திலே வேதமொழிக்கு மறுதலையான அந்நியசாத்திரங்களும் மயக்கஞ்செய்யும்பொருட்டு என்னுற்றானே செய்யப்பட்டன; அவை வாமம் பாசுபதம் லாகுலம் பைரவம் என்பனவும் பிறவுமாம். அவை வேதபாகியமாதலிற் சத்துக்களாற் கொள்ளப்படுவனவல்ல." எனச் சிவன்றானே வாமமுதலியவற்றை விலக்கியமை கௌர்மபுராணத்துக் காணப்படலின்.

ககக. இவ்வாறே ஏனைமார்க்கநூல்கட்குக் கிழாசிரியருண்மையின், வேதசிவாகமங்களோடு முரணுதலுள்வழி, அது தாற்பரியத்தைத் திரித்துணர்ந்தமைகாரணமாகவுடைத்தாதலின் அப்பிராமாணியமும், முரணுதலில்வழிப் பிராமாணியமுமாம். வேதசிவாகமங்களுக்கோ எதனாலும் வாதையில்லை. யாண்டு விரோதந் தோன்றுமோ ஆண்டெங்ஙனம் ஒன்றொடொன்று விரோதமும் இடைவிரோதமும் இல்லையாகும் அங்ஙனம் முன்பின்னுராய்ச்சி முதலியவற்றால் விரோதபரிகாரஞ் செயற்பாலது. ஒன்றையும் வாதித்தலாகாது. இவ்வேத ஆகமங்கட்கு இதுவே பேதம்:—ஒன்று மூவருணத்தரை அதிகாரிகளாக வுடையது; ஏனையது நால்வருணத்தரையும் அதிகாரிகளாகவுடையது.

ககஉ. அற்றேல், அஃதாக; சிவனாற்செய்யப்பட்டமையால் ஆகமங்கள் பிரமாணமாமெனமுடிப்பது அதனை நிச்சயிக்கும் மகாசனங்கள் கைக்கொள்ளுதலேயாயின் அதுவே இல்லையெனப்பட்டதன்றோ என்னில், சிவப்பிரதிட்டை சிவபூசை முதலியவற்றில் எல்லாருக்கும் பழிக்கப்படாத பிரவிருத்தியுண்மையானும், சுவேதர் உபமன்னியுமுதலியோர் தீக்ஷையைக்கைக் கொண்டமை கேட்கப்படுதலானும், இப்பொழுதையாருள்ளும் பிரமவித்தையிற்போல எல்லாருக்கும் மலபரிபாகமின்மையாற் சிறுபான்மையர்க்குப் பிரவிருத்தி பொருந்தலானும், என்க.

ககஙு. சித்திரனுஞ் சாண்டிலியனும் நரகில் வீழ்ந்தது தந்திரத்தை அனுட்டித்ததனாலாயதன்று என்பதே அதன்பொருள்; பின்னைவைதிகத்தை விடுதலால் ஆயது என்பதே தெள்ளிதின் உணரப்படுகின்றது. கௌர்மபுராணத்து வசனமும் வைதிகத்துக்கு, மாறாய வாமமுதலியவற்றை விஷயமாக வுடையதென்க.

௧௧௪. [illegible]

௧௧௫. [illegible]

௧௧௬. [illegible]

---

* சதுர்லக்ஷணி என்பது வியாசர்செய்த ஒருநூலோ அல்லது பாடத் தவறோ தெரியவில்லை.

ககச. இங்ஙனமாகப் பகவானாகிய வியாசனால் சதுர்லக்ஷணியிலே "நாநுமாநிகம்" (நாநுமாநிகம்) என்றற்றொடக்கத்தால் ஆகமம் நிராகரிக்கப்பட்டதெனில், அன்று. "ஶரீரரூபக" (சரீரரூபக) என்றுதொடங்கி "பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்" (பத்தியுரசாமஞ்சஸ்யாத்) என்னுந்துணையால் சாங்கியநூல்களின் பிரமாணமாந்தன்மை நிராகரிக்கப்பட்டது. அதுவும் வேதங்கட்கு மறுதலையான பொருட்கூற்றிற்றானே; கிரியைக் கூற்றினுமோ அல்ல. ஆண்டும் சித்தாந்த சைவாகமத்துக்கு அநிராகரணம் இன்று; அது பெறப்படாமையின். "பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்" (பத்தியுரசாமஞ்சஸ்யாத்) என்னும் இதுவோ ஆற்றலொத்த பாசுபதத்தைத்தான் கேவலநிமித்தேசுவரவாதிகளாகிய சைவருளொருசாராரைத்தான் நிராகரித்ததாகலின் யாதும் முரணின்றென்க.

ககரு. அற்றேல், ஆகமங்கள் பிரமாணமாதல் அமைக; அங்ஙனமாயினும் அது காரியத்திற்றானே, சிவனினும் அல்ல; உற்பத்தியைக் கிரகிக்கும் உபாயமாகிய பிரவிருத்திமுதலியன காரியமொன்றையே விடயமாகவுடைமையாற் சித்தமாகிய பொருளினும் உற்பத்தியைக் கிரகித்தலின்மையின். எனில், இல்லை; பிரவிருத்தி முதலியவற்றாற் சத்தியைக் கிரகித்தலினும் பிறிதினாற் பெறப்படுங் காரியக்கூற்றைவிட்டுப் பிறிதினாற் பெறப்படாத குடமுதலிய கூற்றிற்றானே அப்பதத்தின் சத்தியைக்கிரகித்தல் பொருந்தலானும் "மகனுனக்குப் பிறந்தான்" என்றற்றொடக்கத்தவற்றில் சித்தமாயதினும் உற்பத்தியைக் கிரகித்தல் காணப்படலானும். இம்மதத்துப் பிராமாணியமும் அப்பொருளால் வரையப்பட்ட சிற்சத்திரூபமாயபிரமை. பொருள்வரைவும் ஐயமுதலியவற்றினீங்கிய புத்தி விருத்தியைச்சார்ந்த பொருளுடையதாதல், அது:— "ஐய முதலியவற்றினீங்கிய சிற்சத்தி மானமென விரும்பப்படுகின்றது." என.

ககசு. பிரமையின் கருவியாதலோ இலக்கணமாகாது; தீபமுதலியவற்றின் அதிவியாத்தியாதலின். அது:—"பிரமிதியின்கருவியாயினது எதனாற் பிராமாணமாகாது எனின், தீபம் கண்முதலியனவும் பிராமாணமாதல் பற்றுதலின் ஆகாது." என்பது. கருவி மேயமாதலால் மானமாதல் பொருந்தாமையானும். அது:—"யாது மேயம் அது மானமாகாது; மானத்தால் அளக்கப்படுதலின்." என்பது. ஆண்டு விடயவரைவென்னுமிலக்கணத்ததாய பிராமாணியம் தற்பிரகாசத்தன்மையான் அறிவாற் கிரகிக்கப்படுகின்றது. புத்திவிருத்தியைச்சார்ந்த யதார்த்தியுமே மனத்தால், அது தன்னிற் கிரகிக்கப்படுவதாதலின். தன்னிற்கிரகிக்கப்படுதலோ யாதை தோன்றுக்காலத்ததாய தன்சார்பாகிய விடயத்தையுடைய லௌகிகப் பிரத்தியக்ஷத்தாற் கிரகிக்கப்படுதல். இது அசித்தமுமன்று; சாமக்கிரியே ஆண்டு மானமாதலின். எப்போது நிகழ்கிற உணர்வு விஷயமாக்கப்படுகின்றதோ அப்போது அர்த்தத்தால் வரையப்பட்டது. அர்த்தமும் விசேஷணம் விசேஷியம் சம்பந்தமுதலியரூபமுடையது. அதனையுங் கிரகித்தல் அவசியம். இந்த யதார்த்தமான புத்திவிருத்தியும், ஞானசாமக்கிரிமாத்திரத்தானன்று; விபரியயமுதலியவற்றுக்கும் யதார்த்தத்தன்மை எய்தலின். ஆனால் குணமுதலியவற்றால் விசேடிக்கப்பட்ட அதனால் குணமும் ஏற்றபெற்றி பலதரமான அவயவ இந்திரியங்களின் சம்பந்தமுதலியன.

௧௧௭. 𑌯𑌥𑌾𑌹 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌸𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌶𑌬𑍍𑌦𑍇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾; 𑌅𑌰𑍍𑌥𑌾𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑍍𑌯𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌾𑌨𑌿. 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌮𑍍; 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌚𑍇𑌤𑌿. 𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍:— "𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌨𑌸𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾." 𑌇𑌤𑌿. 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌰𑍂𑌪𑌮𑍍. 𑌤𑌦𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌮𑍍; 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌂 𑌚𑍇𑌤𑌿. 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌬𑍋𑌧𑌰𑍂𑌪𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍. 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌶𑌿𑌵𑌬𑍋𑌧𑌰𑍂𑌪𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍. 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌮𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌮𑍍; 𑌯𑍋𑌗𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌮𑌾𑌧𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌞𑍍𑌚𑍇𑌤𑌿.

௧௧௮. 𑌅𑌨𑌾𑌦𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌃. 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇. 𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍇 𑌸𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌨𑌮𑍍.

௧௧௯. 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌶𑍍𑌚 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌃; 𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑍍𑌵𑌯𑍀 𑌕𑍇𑌵𑌲𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍀 𑌅𑌨𑍍𑌵𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍀 𑌚𑍇𑌤𑌿. 𑌤𑍇𑌷𑌾𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌵𑌯𑍋 𑌨𑌾𑌮𑍍𑌨𑍈𑌵 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍.

௧௨௦. 𑌆𑌪𑍍𑌤𑍋𑌕𑍍𑌤𑌿𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃. 𑌆𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌵𑍇𑌦𑌕𑌂 𑌵𑌚𑌨𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌿𑌃.

௧௨௧. 𑌆𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌾 𑌚 𑌤𑌦𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌸𑌮𑌭𑌿𑌵𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌃. 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌤𑍁 𑌅𑌨𑍍𑌵𑌯𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌵𑌿𑌰𑌹𑌃. 𑌆𑌸𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌅𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌾 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑍈𑌵, 𑌇𑌯𑌞𑍍𑌚 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌆𑌪𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇. 𑌅𑌯𑌮𑌪𑌿 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑍈𑌵 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇. 𑌇𑌤𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃.

௧௨௨. 𑌨𑌨𑍁 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌤𑍍 𑌕𑌥𑌂 𑌤𑌾𑌦𑍃𑌶𑌃 𑌶𑌿𑌵𑌸𑌮𑌤𑍍𑌵𑌪𑍂𑌰𑌣𑌂? 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌯𑍋𑌰𑌪𑌿 𑌤𑌾𑌦𑍃𑌶𑌯𑍋𑌃 𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍, 𑌤𑌯𑍋𑌰𑌪𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍. 𑌤𑌥𑌾 𑌚 [illegible] 𑌇𑌤𑍍𑌯𑌤 𑌆𑌹; 𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯𑍇𑌤𑌿. 𑌅𑌤𑍍𑌰 𑌸𑌂𑌹𑍃𑌤𑍇𑌰𑌿𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍. 𑌅𑌤 𑌏𑌵 [illegible] 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌹𑌰𑌣𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍. 𑌹𑌰𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌜𑌗𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑍍.

௧௧௭. யதார்த்தமாகிய புத்திவிருத்தியும் பிரத்தியக்ஷம் அனுமானம் சத்தம் என மூவகைத்து; அவற்றின் சாதநங்களாகிய அநுப்பிரமாணங்களும் அப்பெயரின. ஆண்டுப்பிரத்தியக்ஷம் மூவகைத்து; பொறிகளை அவாவிய தும், அந்தக்கரணத்தை அவாவியதும், அவாவலில்லதும் என. அது:— "பிரத்தியக்ஷம் பொறி மனம் ஞானம் என்பவற்றின்வயத்தால் மூவகைத்து." என்பது. ஆண்டு அவாவலில்லது ஞானப்பிரகாசரூபமானது. அதுவும் இருவகைத்து; சுவசம்வேத்தியம் சுவசம்வேதனம் என. அவற்றுட் சுவசம் வேதனம் தன்னுன்மாவை விடயமாகவுடையஞானம். சுவசம்வேத்தியம் சிவனை விடயமாகவுடைய ஞானம். அந்தக்கரணத்தை அவாவியஞானமும் இருவகைத்து; யோகிஞானமும் சுகாதிஞானமும் என.

௧௧௮. அனுமிதியோ குறியாற்பொருளை அளந்துணர்தல். குறியும் வியாத்தி பக்கதருமத் தன்மைகளோடுகூடியது. வியாத்தியும் சாதனத்தி னிலைக்களத்துச் சாத்தியம் முழுதுமிருத்தல்.

௧௧௯. குறியும் மூவகைத்து; கேவலாந்நுவயி கேவலவியதிரேகி அந்நு வய வியதிரேகி என. அவைகட்கும் இயைந்தபொருளுடைய பெயராற்று னே இலக்கணம் உரைக்கப்பட்டது.

௧௨௦. ஆத்தனுடைய கூற்றாகிய ஆற்றல் சத்தமாம்; அவாய்நிலைமுத லியவற்றோடு கூடியவசனமே அக்கூற்றாம்.

௧௨௧. அவாய்நிலையும் அவ்வப்பதங்களின் இயைபுக்கேற்ற வேற்று மைமுதலியவற்றை வழங்குதல். இதுவும் அறியப்பட்டதாய் உபயோகப் படுகின்றது. தகுதியோ இயைபின்மையைத்துணிதலின்மை. தீயினால் நனைக்கிறான் என்றறற்றொடக்கத்தனவும் அந்நிலைமையிலே தகுதியுடையன வாக, நீரால் நனைக்கிறான் என்பதும் இயைபெனக்கோடல் பிராந்தியாயவழித் தகுதியில்லதே. இத்தகுதியும் அவாய்நிலையியல்பு உள்ளவழியே உபயோக மாம். அண்மைநிலை பதங்கள் இடையீடின்றி நிற்றல்; இதுவும் தகுதிபோல் உபயோகமாகும். மற்றை உபமானம் அருத்தாபத்தி முதலியனவும் இவற் றுள்ளே தானே அடங்கும் எனக்காண்க.

௧௨௨. அற்றேல், இங்ஙனமாயினும் அப்படிப்பட்டவர் சிவன்றானே என்று துணிதல் எங்ஙனம்? விட்டுணு பிரமரும் அவ்வியல்பினராய் இருத்த லானும் அவரும் சிருட்டிமுதலியவற்றின் காரணரென்று சுருதிமுதலியவற் றிற் கேட்டலானும். அவ்வாறே அவரால் வேறுபயனும் குறித்த இலக்க ணம் அவரில் அதிவியாத்தியாதலும் ஆம் என்றாசங்கித்துக் கூறுகின்றார். 'ஸம்ஹ்ருத்ய' (சங்கரித்து) என்புழி ஒத்தவினைமுதலுடையவற்றுண் முற்காலம் என்பது க்த்வா (க்துவா) என்பதன்பொருள். ஒத்தவினைமுதலுடைமை கூறவிரும்பப்பட்டது. இதம் (இது) என உலகஞ்சுட்டப்படுகின்றது; எடுத்துக்கொண்டதாக வின். எடுத்துக்கொண்டசிருட்டி, திதிமுதலியவற்றுக்கும் உபலக்கணமாம். அரன் என்னுஞ்சொல் யோகரூடியாய்ச் சங்காரகருத்தாவாகிய சிவனை உணர்த் தும். ப்ரபு: ஆளுந்திறலுடையவன்; உலகத்தின் கருத்தா என்றபடி.

௧௨௩. 𑌅𑌯𑌂 𑌭𑌾𑌵𑌃 — 𑌅𑌸𑍍𑌤𑌿 [illegible] 𑌸𑌂𑌹𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌳𑌯𑌃. [illegible] 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 [illegible] 𑌸𑌂𑌗𑌤𑌂.

௧௨௪. [illegible] 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 [illegible] 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 [illegible] 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 [illegible].

௧௨௫. [illegible] 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍌, [illegible] 𑌇𑌤𑌿 [illegible] 𑌸𑌂𑌹𑌾𑌰 [illegible] 𑌇𑌤𑌿 [illegible] 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌂. 𑌤𑌥𑌾𑌹𑌿 — [illegible] 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 [illegible] 𑌇𑌤𑌿 [illegible] 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌂. 𑌤𑌥𑌾𑌹𑌿 𑌅𑌯𑌮𑌰𑍍𑌥𑌃 — [illegible] 𑌸𑌂𑌹𑌾𑌰𑌃 [illegible] 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 [illegible] 𑌸𑌂𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 [illegible] 𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌤𑍍.

௧௨௬. [illegible]

௧௨௩. இது தாற்பரியம்:—மகாசங்காரமாகிய பிரளயம் வேதாகமானுமானங்களாற் சாதிக்கப்பட்டதாய் உளது. அக்காலத்திலே எந்தச் சங்கார கருத்தா சங்கரித்தலால் அதற்குரியவர்கள் தடுக்கப்பட்ட அறிவுதொழிலாற்றலுடையராதலாலே தனக்கே சிறப்பானமொழியினால் நிச்சயிக்கப்பட்டானோ அவனே சிருட்டிமுதலியவற்றையுஞ் செய்பவன் என்பது சம்மதமாம்.

௧௨௪. ஈக்ஷியத்தியதிகரணநியாயத்தானுங் கதிசாமானியத்தானும் அவ்வியல்பினன் சிவனே; அவன்றானே அதர்வசிகையின் உபவிருங்கணமாக, "முன்னே விட்டுணு முதலிய தேவர்" என்றற்றொடக்கத்தாற் காந்தத்தாலும், சுவேதாச்சுவதரத்தின் உபவிருங்கணமாக, "அதன்பின்பு தேவர்கள் அவனைக்கேட்டார்" என்றற்றொடக்கத்தான் இலிங்கபுராணத்து வசனத்தாலும், "இறைவன் அறிவன் கருத்தன்" என்றற்றொடக்கத்துச் சாந்திபருவத்து வசனங்களாலும் பிறவசனங்களாலும் அப்போது உத்தரரூபமான தன்மொழியினாலே துணியப்பட்டமையின்.

௧௨௫. பிரமவிட்டுணுக்களோ அல்லர்; அங்ஙனம் பிரமாணமின்மையானும், ஏகதேசத்து அவரை அவ்வாறு கூறும்வசனம் அவரை அதிட்டித்த சிவனிற் கருத்துடையதாயேனும் பிராகிருதப் பிரளயத்தின் மேலதாயேனும் அமைதலானும், இப்பொருளை முடிந்ததுபோல வைத்துக்கூறுகின்றார்; 𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 (அஸ்மாத்) என. சிவனே சங்கரிப்பவனாதலால் என்றபடி. ஹர:—சங்கரிப்பவன் அவனே பிரபு எனச்சூத்திரித்தமையின் இதற்கு வேறுபொருளுங் கூறவிரும்பப்பட்டது. எங்ஙனம்:—அற்றேல், சிவனுக்குச் சிருட்டியாதி ஐந்தொழிலுமியற்றல் ஒத்ததாகச் சங்காரத்தொழிலை உபாதியாகவுடைமை பற்றிஅரசத்தம் வழங்கியதென்னை என்றாசங்கித்துக் கூறுகின்றார். சங்கரித்து என. இங்கே விகுதிப்பொருள் முற்காலத்ததாதல் என விரும்பப்பட்டது. ஆகவே இது கருத்து:—முன்பு சங்காரம் பின்புசிருட்டி. சங்கரிக்கப்படாததைச் செய்யப்பட்டவாதையுடையதல்லாததைச் சிருட்டித்தல் ஆகமாட்டாது; சற்காரியவிலக்காதலின். சங்காரஞ் சிருட்டியை முன்னாகவுடையதென்னும் நியமமும் இல்லை; சிருட்டிக்கப்படாதனவாய முன்னின்மை பரமாணுவாய ஆணவமாயாமலங்களின் சம்பந்தமுதலியனவுஞ் சங்கரிக்கப்படுதலின்.

௧௨௬. ஆதலிற் சங்காரந் தலைமையுடைத்து; அதனால் அக்கினிட்டோம முதலிய பலவேள்விகளுஞ்செய்தானைச் சத்திரயாகத்தலைமைபற்றிச் சத்திரயாசி என வழங்கல்போலவும், பல புருடரும் வாழுங் கிராமங்களைத் தீக்ஷிதர் புலவர் முதலியோரதுதலைமைபற்றித் தீக்ஷிதக்கிராமம் வித்துவத்கிராமம் முதலியபெயரால்வழங்கல்போலவும், சிருட்டிமுதலிய பலதொழிலுஞ் செய்பவனையுஞ் சங்காரத்ததுதலைமைபற்றி அரனென வழங்கல் அமையும்.

௧௨௭. நநு ஏததிதி ஸ்ருஜதீதி ச வ்யாஹதம்; ஏததிதி ஸித்தநிர்தேசே ஸ்ருஜதீதி ஸாத்யநிர்தேசாநுபபத்தி: ஸ்ருஜதீதி ஸாத்யநிர்தேசே ஏததிதி ஸித்தநிர்தேசாநுபபத்தி:; ஸ்ருஜ்யஸ்ய ஸித்தத்வாநுபபத்தே:. ததா ச ஏதத் ஜகத் ஸ்ருஜதீதி வ்யாஹதம். இதி.

௧௨௭. அற்றேல், இதை என்பதும் படைக்கிறான் என்பதுந் தடுக்கப்படுதற்குற்றமுடையன. இதை என முடிந்ததைச்சுட்டும்வழிப் படைக்கிறான் என்று படைத்தல்கூறல் பொருந்தாது. படைக்கிறான் என்று படைத்தலைச் சுட்டும்வழி இதை என முடிந்ததைச்சுட்டல்பொருந்தாது; படைக்கப்படவேண்டியது முடிந்தகருமமாதல் கூடாமையின். ஆகவே இவ்வுலகைப்படைக்கிறான் என்பது தடைபட்டதாயிற்று. எனின்;

௧௨௮. மைவம்:- ஸித்தஸ்யைவ வாஸநாத்மநா ஸ்திதஸ்ய ஸ்தூலரூபேணாபிவ்யக்தி: ஸ்ருஷ்டி: இத்யப்யுபகமே தோஷாபாவாத்.

௧௨௮. அற்றன்று; வாசனையியல்பின் முடிந்ததாயுள்ளதே ஸ்தூலரூபமாக வெளிப்படுதல் சிருட்டியாம் எனக்கொள்ளுதலிற் குற்றமின்மையின்.

ஏவம் ஸம்க்ஷேபேண வ்யாக்யாதம்.

இவ்வாறே சுருக்கமாக முதற்சூத்திரம் உரைக்கப்பட்டது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணெய்நல்லூர்

மெய்கண்டதேவர்

அருளிச்செய்த

சிவஞானபோதத்தில்

இரண்டாஞ்சூத்திரத்து

மூன்றுமதிகரணத்துக்கு,

திருக்கைலாசபரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்துச்

சிவஞானசுவாமிகளருளிச்செய்த

திராவிடமாபாடியம்

என்னும்

சிவஞானபோதமாபாடியம்

இது

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச்

சுவாமிநாதபண்டிதரால்

பரிசோதித்து,

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

நள௵ சித்திரை௴

ரிஜிஸ்டர் காபிரைட்.

☞ சிதம்பரத்து ஸ்ரீசபாநாயகர் திருவனந்தற்கட்டளை ம-ள-ள-ஸ்ரீ வே. தில்லைநாயகமுதலியாரவர்கள் இப்பாடியத்தை உலகினர்க்குப் பயன்படுமாறு தந்து புகழ்புண்ணியங்களைப் பெற்றமைபோலப் பிற அன்பர்களும் பாடியத் துணுக்கைகள் வைத்திருப்பின் தந்து வெளிப்படுத்துவித்து அப்புகழ்புண்ணியங்களை அடையும்படி சிவபிரான் றிருவருள் பாலிப்பாராக.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொதுவியல்பு.

பிரமாணவியல்.

இரண்டாஞ்சூத்திரம்.

மூன்றுமதிகரணம்.

அண்டத்தியல்பு.

இனி, இவ்வுடம்புகளோடு கூடிநின்று போக்குவரவு செய்தற்கிடனாகிய அண்டங்களினளவையும் அவற்றதியல்புந் தொகுத்துக்கூறுதும். சாளரத்திற் றோன்றுஞாயிற்றின்கதிரின் அதிநுட்பமாய்த்தோன்றும் நுண்ணியது ரேணு வெனப்படும். அஃதெண்மடங்குகொண்டது திரிசரேணு. அஃதெண்ம டங்குகொண்டது கசாக்கிரம். அஃதெண்மடங்குகொண்டது இலீகை. அஃதெண்மடங்குகொண்டது யூகை. அஃதெண்மடங்குகொண்டது இயவை நெல்லு. இயவைநெல்லு அகலம் எட்டுக்கொண்டது ஓரங்குலம். அங்குல மிருபத்துநான்குகொண்டது ஒருமுழம். முழம் நான்குகொண்டது ஒருவில்லு. வில்லிரண்டுகொண்டது தண்டம். தண்டமிரண்டாயிரங்கொண்டது ஒரு குரோசம். குரோசம் நான்குகொண்டது ஒருயோசனை. ஆகலான் இந்தவள வையிற் சாதாரணப் புடவிதத்துவமாகிய அண்டம் நூறுகோடியோசனை உயர நீள அகலங்களை உடைத்து. இதற்குவகை கீழண்டச்சுவர்க்கனங்கோடியோ சனை. அதற்குமேல் காலாக்கினியுருத்திரபுவனங் கோடியோசனை. இந்தப்புவ னத்திற் காலாக்கினியுருத்திரர் ஆயிரம்யோசனை உயரமும், இரண்டாயிரம்யோ சனை அகலமுமுடைய சிங்காதனத்திற் செந்தழல்மயமான திருமேனி பதினா யிரம்யோசனை உயரமுடையவராய், வலக்கரத்தின் வாளும் அம்பும் இடக்கரத் திற் கேடகமும் வில்லும் உடையவராய் எழுந்தருளியிருப்பர். அவர்க்குப் பரிவாரமாய் அவரோடொத்த வடிவுடையவராய்ச் சூழ்ந்திருக்கும் உருத்திரர் பதின்மருளர். அவருளொவ்வொருவர்க்குக் கோடியுருத்திரர் பரிவாரமாய்ச் சூழ்ந்திருப்பர். இத்தன்மையராகிய காலாக்கினியுருத்திரர்திருமேனியின் மேனோக்கியெழுந்த சுடர்க்கொழுந்து காலாக்கினியுருத்திரபுவனத்துக்கு மேற் பத்துக்கோடியோசனை. அதன்புகைப்படலம் அதன்மேல் ஐந்துகோடி யோசனை. ஆக அண்டச்சுவர்க்கனமுள்படப் பதினேழுகோடியோசனை கண்டு கொள்க. இது "அருட்படைபரப்பிய மருட்பெருங்குரிசில்,"* என்னு ஞானா மிர்தத்தினுங்காண்க.

---

* இச்செய்யுள் அச்சிடப்பட்ட ஞானாமிர்த ஞானபாதத்தும் அச்சிடப்படாது எம்மிடத்திருக்கும் யோகபாதத்தும் காணப்படவில்லை. கிரியாபாத சரியாபாதங்கள் கிடைத்தில.

இந்தப் பதினேழுகோடியோசனைக்குமேற் பாவிகள் சென்றடையுமிடமாகிய நரகலோகங்கள் ஒன்றின்மேலொன்றாக ஒரோவொன்று தொண்ணூறிலக்கம்யோசனையளவுடைய முப்பத்துமூன்று தளங்களுந் தனித்தனி நூறாயிரம் யோசனையளவுடைய முப்பத்திரண்டு இடைவெளியுமுடையவாயுள்ளன.

இந்த நரகங்கள் நரகமும், மாநரகமும், இராசநரகமும், இராசராசேசுர நரகமுமென நான்குவகைப்படும்.

அவற்றுள் நரகம் இரௌரவமும், துவாந்தமும், சீதமும், வெப்பமும், சந்தாபமும், பற்மமும், மாபற்மமும், காலசூத்திரமுமென எண்வகைப்படும்.

மாநரகம் சூசிமுகமும், காலகடகமும், மகுராதாரமும், அம்பரீடமும், தத்தாங்காரமும், மாதாகமும், சந்தாபமும், பீபற்சமுமென எண்வகைப்படும்.

இராசநரகம் இலாக்காப்பிரலேபமும், மாஞ்சாதமும், நிருச்சுவாசவுச்சுவாசமும், யுக்குமாத்திரியும், சான்மலியும், உலோகப்பிரதீர்த்தமும், சுறபிபாசமும், கிருமிநிசயமுமென எண்வகைப்படும்.

இராசராசேசுரநரகம் உலோகத்தம்பமும், விண்மூத்திரமும், வைதரணியும், தாமிச்சிரமும், அந்ததாமிச்சிரமும், கும்பிபாகமும், மாரௌரவமும், அபீசியுமென எண்வகைப்படும்.

இந்த நால்வேறுவகையின் எவ்வேழுக்கு ஒவ்வொன்று பிரதான நரகமுமாக இருக்கும். ஆக முப்பத்திரண்டு நரகின்பெயருங் கண்டுகொள்க.

இங்ஙனம் முப்பத்திரண்டு இடைவெளிகளினளவு தனித்தனி இலக்கமும், முப்பத்துமூன்று தளங்களினளவு தனித்தனி தொண்ணூறிலக்கமுமாக நரகலோகம் முப்பதுகோடியே இரண்டிலக்கம்யோசனை உயரமுடைத்தெனக் கண்டுகொள்க. இவற்றின் அகலநீளம் காலாக்கினியுருத்திரர்புவனம்போலப் பிரமாண்டகடாகம்வரையுமாம். முன்னர்க் கூறப்படும் உலகங்கட்கும் அகலநீளம் இவ்வாறேகாண்க.

இந்த நரகலோகங்களுக்குமேல் நிராலம்பவெளி முப்பதினாயிரம் யோசனையுயரம். அதன்மேல் ஒன்பதுநூறாயிரம் யோசனையுயரமுடைய நிலம், மேலே பொன்மயமுங் கீழே இரும்புமயமுமென்று இரண்டுபுடமாய் அவ்விருப்புப்புடத்தினொருபக்கம் மண்மயமாயிருக்கும். அதன் கீழ்த்தளத்தின் ஊழிக்காலத்தின் ஞாயிறுபோன்றவடிவமும் கராளமுகமும் மூக்காமுமுடைய கூஷ்மாண்டர் முப்பத்திரண்டு நரகங்கட்கும் அதிபதியாய்த் தம்மோடொத்த உருத்திரகணங்களோடும் வீற்றிருப்பர்.

இந்தக்கூஷ்மாண்டபுவனத்தின்மேல் ஏழுநிலமுடைய பாதாளம் ஏழுளவாம்.

அவை ஆபாசமும், பாதாளமும், நிதலமும், கபத்திமானும், மாதலமும், இராசாங்கமும், பாதலமும் என்பனவாம்.

இவற்றுள் ஆபாசம் முதலிய ஆறுலகமும் ஒரோவொன்று ஒன்பதினாயிரம் யோசனை உயரமும் மேனிலம் ஆயிரம்யோசனை உயரமும் உடையன.

பாதலமென்னும் பாதாளம் பதினாயிரம் யோசனை உயரமும் இரண்டு கோடியே எண்பத்தெட்டுநூறாயிரம் யோசனையுயர்ந்த மேனிலமும் உடையது.

இவ்வேழனுள் ஒரோவொன்று மும்மூன்று கண்டமாம். அவற்றுட் கீழ்பாற்கண்டத்தின் ஆபாசம் முதல் ஏழினும் முறையே சங்கசுருதியும், பிரகலாதனும், சிசுபாலனும், கற்கந்துகனும், இரணியாக்கனும், பிரகற்கருப்பனும் பெலியும் என்னும் அசுரவேந்தரெழுவரும், நடுக்கண்டமேழினும் முறையே குடிலகனும், வாசுகியும், கம்பலனும், காற்கோடகனும், காளாங்கனும், துர்த்தரிசனும், தக்ககனும் என்னும் உரகவேந்தர் எழுவரும், மேல்பாற்கண்டம் ஏழினும் முறையே விகடனும், உலோகிதாக்கனும், இயமனும், விகடானனனும், காாளனும், பீமநிருகிராதனும், பிங்கலனும் என்னும் இராக்கதவேந்தர் எழுவரும் அவ்வப்பாதாளங்கட்கு அதிபதிகளாயிருப்பர்.

இவற்றுண் மேலெல்லைக்கணின்ற பாதலமென்னும் பாதாளத்திற் பொன்மயமாய் ஆயிரம்யோசனையளவுடைய புவனத்தின் இவ்வெழுபாதாளங்கட்கும் அதிபதியாகிய ஆடகேசுரர், அவுணர் இராக்கதர் இயக்கர் கடவுளர் மகளிரெல்லாரும் ஏழிசைப்பாடல்களாற் றுதிசெய்ய வீற்றிருப்பர். இங்ஙனம் முப்பத்துமூன்று நிலமுடைய முப்பத்திரண்டு நரகங்களுக்குமேல் நிராலம்பவெளி முப்பதினாயிரம் யோசனையும், அதன்மேற் கீழ்த்தலத்திற் கூஷ்மாண்டர் வீற்றிருக்கும் நிலம் ஒன்பதுநூறாயிரம் யோசனையும், அதன் மேற் பாதாளங்கள் ஒவ்வொன்றிடைவெளி ஒன்பதினாயிரயோசனையும், மேனிலம் ஆயிரயோசனையும், மேனிலைக்கணின்ற ஏழாம் பாதாளத்திற்கு இடைவெளி பதினாயிர யோசனையும், அதற்குமேனிலமாகிய பூமி இரண்டு கோடியே எண்பத்தெட்டுநூறாயிரயோசனையும் ஆக நரகலோகத்தின்மேற் பூமியளவின் இரண்டுகோடியே தொண்ணூற்றெட்டிலக்கம் யோசனை. நரகலோகம் முப்பதுகோடியே இரண்டிலக்கம் யோசனையும் அதன்கீழ் அண்டகடாகவரையிற் பதினேழுகோடி யோசனையுமுள்படப் பூமிக்குக்கீழ் ஐம்பது கோடி யோசனையளவு கண்டுகொள்க.

இனி இரண்டுகோடியே எண்பத்தெட்டு நூறாயிரம் யோசனையுடைய பூமியின் மேற்பரப்பும் பிரமாண்டத்திற்கு நடுவாய் நூறுகோடியோசனை விரிவும் ஏழுபெருங்கடலும் ஏழுபெருந்தீவும் நடுவே மேருவரையு முடைத்தாய்ப் பூலோகமெனப் பெயர்பெறும். ஏழு பெருந்தீவின் நடுத்தீவாவது:—நூறாயிரம் யோசனை பரப்புடைத்தாய் வட்டமாய் நிலமகட்கு உந்தித்தானமாயுள்ளது நாவலந்தீவு. இந்த நாவலந்தீவின் நடுவே ஞாயிற்றினொளியும் மழுங்கும்படி பேரொளிகான்று பொன்மயமான மேருவரை நூறாயிரம் யோசனையளவுடைத்தாய் அவற்றுட் பதினாறாயிரம் யோசனையளவு பூமிக்குள் ஆழ்ந்து எண்பத்துநான்கு நூறாயிரம்யோசனை பூமிக்குமேல் உயர்ந்து மூலத்திற் பதினாறாயிரம்யோசனை விரிவும் முடியின் முப்பத்தீராயிரம் யோசனை விரிவுமுடைத்தாய் முக்கூறாய், முக்கூற்றினும் முறையே கீழ்க்கீழ் மேகலையை நோக்கி மேன்மேல் நாலாயிரம்யோசனை அகலம் மிக்குடையனவாகிய மூன்று மேகலைகளையும் உடைத்தாய்த் தாமரைப்பொகுட்டுவடிவிற்றாய் நிற்கும்; முக்கூற்றினடிக்கூறு பூமிக்குமேல் இருபத்தையாயிரம் யோசனை உயரம். அதன்மேற்

றாகிய முதன்மேகலை மூவாயிரம் யோசனையுயரமும் பதினாயிரம் யோசனைப் பரப்புமுடைத்தாய்க் கடகம்போல் வயங்கும். அதன்மேல் நடுக்கூறு இருபத்தையாயிரம் யோசனையுயரம். அதன்மேற்றாகிய நடுமேகலை மூவாயிரம் யோசனையுயரமும் பதினாலாயிரம் யோசனைப் பரப்புமுடைத்தாய்க் கடகம்போல் வயங்கும். அதன்மேல் நுனிக்கூறும் இருபத்தையாயிரம் யோசனையுயரம். அதன்மேற்றாகிய மூன்றாமேகலை மூவாயிரம்யோசனையுயரமும் பதினெண்ணாயிரம் யோசனைப்பரப்பு முடைத்தாய்ச் சக்கரவாளமென்னும் பெயர்த்தாய்க் கடகம்போல்வயங்கும்.

இங்ஙனம் முக்கூற்றிற்கும் உயரம் இருபத்தையாயிரம் யோசனையும் மூன்றுமேகலைக்கும் உயரம் மூவாயிரம் யோசனையுமாகப் பூமிக்குமேல் உயரம் எண்பத்து நாலாயிரம்யோசனை. பூமியின்கீழ் ஆழ்ந்தது பதினாறாயிரம் யோசனையுமுள்பட மேருவரையினீளம் நூறாயிரம் யோசனையுங்கண்டுகொள்க.

இதன் மேகலை மூன்றனுட் கீழிரண்டு மேகலையினுஞ் சித்தர் கந்தருவர் முதலியோர் வைகுவர். மேற்கண்ணதாகிய சக்கரவாளமேகலையின்மேற் பலபலகொடுமுடிகளுள. அவற்றுட் கிழக்குமுதலிய வெட்டுத்திக்கினும் ஓரோவொன்று ஒன்பதினாயிரம் யோசனைப்பரப்புடையவாய் அதிவிசித்திரமாய்ப் பலவேறுவகைப்பட்ட வளங்களுடைய நகரங்களெட்டுள. அவற்றுட் கீழ்பால் அமராபதியென்னும் நகரம், தென்கீழ்பால் தேசோவதி, தென்பாற் சமுயமனி, தென்மேல்பாற் கண்ணவதி, மேல்பாற் சுத்தவதி, வடமேல்பாற் கந்தவதி, வடபால் மகோதையை, வடகீழ்பால் ஏசோவதி என்னும் நகரமாம். இவ்வெட்டினும் முறையே இந்திரன் அங்கி இயமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் என்னுந் திசைகாப்பாளர் எண்மரும் தத்தம் பரிசனங்களோடும் வைகுவர்.

இந்த மகாமேருவின் நடுவுச்சியிற் பதினாலாயிரம் யோசனையுயரமும் அகலமுமுடைய மனோவதியும், அதன்மேல்பால் அத்துணை உயரமும் நீளமுமுடைய வைகுந்தமும், அதன்வடபால் இருபதினாயிரம் யோசனை உயரமும் அகலமுமுடைய சோதிட்கமும் என மூன்று கொடுமுடிகளுள. இந்த மூன்றினும் முறையே பிரமன் மால் உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் வைகுவர். இத்தன்மைத்தாகிய மேருவரையின் தென்பால், நிடதம் ஏமகூடம் இமயம் என மூன்று மலைகளும், வடபால், நீலம் சுவேதம் சிருங்கவான் என மூன்று மலைகளும், ஓரோவொன்று இரண்டாயிரம் யோசனையகலமும் பதினாயிரம் யோசனையுயரமும் ஒன்பதினாயிரம் யோசனை இடைவெளியுமுடையவாய்க் கிழக்கு மேற்கு உவர்க்கடல்வரையும் நீண்டுகிடக்கும். மேருவரையின் கீழ்பால் மாலியவான் என்னும் மலையும் மேல்பாற் கந்தமாதனமென்னும் மலையும் ஓரோவொன்று ஆயிரம்யோசனை அகலமும் இரண்டாயிரம் யோசனையுயரமும் முப்பத்து நாலாயிரம் யோசனை நீளமும் உடைத்தாய்த் தெற்கு வடக்கு நிடதம் நீலமென்னும் மலையிரண்டினும் முட்டிநிற்கும். இம்மலை எட்டினுள்ளும் நிடதம் கந்தமாதனம் நீலம் மாலியவான் என்னும் நான்கிற்கும் நடுவாக மேருவைச் சூழ்ந்து நாற்றிசையினும் ஒன்பதினாயிரம் யோசனைப் பரப்புடையநிலம் இளாவிரதவருடமெனவும், மாலியவான் மலைக்குக் கிழக்கு

உவர்க்கடற்கு மேற்கு முப்பத்திரண்டாயிரம் யோசனைப்பரப்புடைய நிலம் பத்திராசுவவருடமெனவும், கந்தமாதனத்திற்கு மேற்கு உவர்க்கடலுக்குக் கிழக்கு முப்பத்திராயிரம் யோசனைப்பரப்புடைய நிலம் கேதுமாலவருடமெனவும், தென்பால் நிடதத்திற்கும் ஏமகூடத்திற்கு மிடையே ஒன்பதினாயிரம் யோசனைப் பரப்புடைய நிலம் அரிவருடமெனவும், ஏமகூடத்திற்கும் இமயத்திற்குமிடையே அத்துணைப் பரப்புடையநிலம் கிம்புருடவருடமெனவும், இமயத்திற்குந் தென்கடற்குமிடையே அத்துணைப்பரப்புடையநிலம் பாரதவருடமெனவும், வடபால் நீலமலைக்குஞ் சுவேதமலைக்கு மிடையே அத்துணைப்பரப்புடையநிலம் இரமியவருடமெனவும், சுவேதமலைக்கும் சிருங்கவானுக்கு மிடையே அத்துணைப் பரப்புடைய நிலம் இரணியவருடமெனவும், சிருங்கவானுக்கும் வடகடற்கு மிடையே அத்துணைப்பரப்புடையநிலம் குருவருடமெனவும் பெயர்பெறும்.

இவற்றுண் மேருவைச்சூழ்ந்த நிலத்தில் மேருமலை சலியாமை நிலைபெறுதற்பொருட்டுக் கிழக்குமுதலிய நான்குதிக்கினும் முறையே வெண்மை பொன்மை கருமை செம்மை என்னும் நிறங்களும், ஐம்பதினாயிரம் யோசனை உயரமுமுடையவாய் மந்தரங் கந்தமாதனம் விபுலம் சுபாரிசமெனப் பெயர் பெற்றுநிற்கும் விட்கம்பமலைகள் நான்குள.

இந்த நான்கு மலைகளினும் முறையே கடம்பும் நாவலும் அரசும் ஆலும் என்னும் நான்கு கற்பகமரங்கள் ஆயிரம்யோசனையுயரமுடையவாய் நிற்கும். இவற்றுள் தென்றிசையினிற்கும் நாவல்மரம் ஏனை மூன்றினுஞ் சிறந்து அதிசயமிக்குடைத்தாதலின் அதன்பெயரானே உவர்க்கடலாற் சூழப்பட்டு இலக்கம்யோசனையளவும் ஒன்பதுவருடமுமுடைத்தாகிய இந்த நடுத்தீவு நாவலந்தீவெனவழங்கப்படும். இந்த நாவற்பழத்தின் சாறொழுகி ஆறாய்ப்பாய்ந்து மேருவைச் சூழ்ந்து அந்நிலத்தினையும் பொன்மயமாக்கி மேருவின் மூலத்திற் சென்றடையும். அந்தச் சாற்றினைப் பருகிய பறவை விலங்கு முதலாயினவும் பொன்னிறம் பெறும். இந்தவிட்கம்பமலை நான்கனுட் கீழ்பால் நிற்கும் மந்தரமலையடிவாரத்திற் சயித்திரரதமென்னும் உய்யானவனமும் அருணோதகமென்னும் மடுவும், தென்பாற் கந்தமாதனத்தின் அடிவாரத்தில் நந்தனமென்னும் வனமும் மானசமென்னும் மடுவும், மேல்பால் விபுலமலையடிவாரத்தில் வைப்பிராசமென்னும் வனமும் சிதோதகமென்னும் மடுவும், வடபாற் சுபாரிசமலையடிவாரத்திற் சுருமானென்னும் வனமும் பத்திராகமென்னும் மடுவும் உளவாம்.

இவையெல்லா முடைத்தாய மேருவைச் சூழ்ந்த நிலமாகிய இளாவிரதமென்னும் வருடத்தின் வாழ்வோர் நாவற்பழச்சாற்றினைப் பருகிப் பொன்மயமாய்ப் பதின்மூவாயிரமாண்டு நிலைபெறுவர். கந்தமாதனத்துக்கும் குடகடற்கும் அந்தராளமாகிய கேதுமாலவருடத்தின் வாழ்வோர் பனசப்பழத்தின் சாற்றைப்பருகிக் குவளைப்பூநிறமுடையராய்ப் பதினாயிரமாண்டு நிலைபெறுவர். மாலியவானுக்குங் கீழ்கடற்கும் அந்தராளமாகிய பத்திராசுவவருடத்தின் வாழ்வோர் கருங்குவளைப்பூவையுண்டு மதியொளிபோலும் நிறமுடையராய்ப் பதினாயிரமாண்டு நிலைபெறுவர். சிருங்கவான்மலைக்கும் வடகடற்கும்

அந்தராளமான குருவருடத்தின் வாழ்வோர் ஆலம்பழத்தை நுகர்ந்து கருங் குவளைப்பூநிறமுடையராய்ப் பன்னீராயிரமாண்டு நிலைபெறுவர். இந்தக்கு ருவருடத்திற்கணித்தாக வடதிசையினும் வாயுத்திசையினும் உவர்க்கட லின்கட் சந்திரத்தீவும் பத்திராகரத்தீவுமென்று இரண்டுதீவுள. அவற்றின் வாழ்வோர் முறையே சந்திரனிறமும் செந்தாமரைப்பூநிறமுமுடையராய்க் கனிகிழங்குகளையுண்டு பதின்மூவாயிரமாண்டு நிலைபெறுவர். சிருங்கவான் மலைக்கும் சுவேதமலைக்கும் அந்தராளமான இரணியவருடத்தின்வாழ்வோர் எலுமிச்சம்பழத்தை நுகர்ந்து மதிபோலும் வெண்ணிறமுடையராய்ப் பன் னீராயிரத் திருநூறாண்டு நிலைபெறுவர். சுவேதமலைக்கும் நீலமலைக்கும் அந்த ராளமான இரமியவருடத்தின் வாழ்வோர் கருப்பஞ்சாற்றைப் பருகி வெள்ளை நிறமுடையராய்ப் பன்னீராயிரமாண்டு நிலைபெறுவர். நிடதத்திற்கும் ஏம கூடத்திற்கும் அந்தராளமான அரிவருடத்தின் வாழ்வோர் தத்தமக்கு வேண் டுங் கனிகளையுண்டு பச்சிலைமரப்பூநிறமுடையராய்ப் பெண்ணுமாணுமாகிய இரட்டைப் பிள்ளைகளைப்பெற்று முப்பதினாயிரமாண்டு நிலைபெறுவர்கள். ஏம கூடத்திற்கும் இமயத்திற்கும் அந்தராளமான கிம்புருடவருடத்தின் வாழ் வோர் இறலியின்கனி நுகர்ந்து பொன்னிறமுடையராய்ப் பதினாயிரமாண்டு நிலைபெறுவர்.

இங்ஙனம் இளாவிரதம் முதலிய வருடங்களெட்டினும் வாழ்வோர் நால் வகையுகங்களான்வரும் அவத்தைவேறுபாடின்றி என்றும் ஒருதன்மையராய் இன்பநுகர்ந்துவாழ்வர்.

இனி இமயத்திற்குந் தென்கடற்கும் நடுக்கண்டமான பாரதவருடத்தின் வாழ்வோர் நால்வகையுகங்களின் அவ்வவ்வுகங்கட்குத் தக்க அறிவும் ஆயு ளும் வடிவும் வலியுஞ் செல்வமும் மக்களுமுடையராய் உழவுமுதலியவற்றான் வருமுணவுகளை மாந்தி அத்தியாத்மிகம் முதலிய மூவகைத் துக்கங்களிற் பட்டுழைகுவர்.

இந்தப் பாரத வருடத்தினீட்டப்படுங் காமியங்கள் ஏனையிடங்களிற் சென்று அனுபவிக்கப்பட்டு அழிவெய்துமாகலின், இஃதோர் பெருங்குண முடைய பாரதவருடம் கருமபூமியென்றும், ஏனையவெல்லாம் போகபூமியென் றும் வழங்கப்படும்.

இவ்வொன்பது வருடங்களையும் நாவலந்தீவிற்கு வேந்தனாக மனுமரபிற் றோன்றிய ஆக்கினீத்திரனென்னுமரசன் தன் புதல்வராகிய பரதன் முதலிய ஒன்பதின்மர்க்கும் பகுத்தளித்தானாகலின் அவரவர்பெயர் அவ்வவ்வருடங் களுக்காயின வென்றுணர்க.

இவற்றுட் பாரதவருடமும் ஒன்பதுகண்டமாய் இந்திரத்தீவும், கசேரு கத்தீவும், தாமிரபன்னித்தீவும், கபத்தித்தீவும், நாகத்தீவும், சவுமியத்தீவும், காந்தருவத்தீவும், வாருணத்தீவும், குமரித்தீவும் எனப்பெயர்பெற்றுப் பல பல மலைகளும் பல பல நதிகளும் பல வேறுவகைப்பட்ட சாதிகளுமுடைத் தாய் வயங்கும். இவ்வொன்பதினுள்ளும் குமரிகண்டமொன்றே வேதாகம வழக்கமும் சாதிவரம்புங் கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களுங் காசிமுத லிய புண்ணியத்தலங்களு முடைத்தாய்ச்சிறந்தது. ஏனை யெட்டுக்கண்டமும்

மிலேச்சர் வாழிடங்களாம். இவ்வாறு நாவலந்தீவினியல்பு தொகுத்துக் காட்டினும். இதனைச் சூழ்ந்துகிடக்கும் உவர்க்கடலும் இதுபோல இலக்கம் யோசனை அகலமுடைத்து. இந்த உவர்க்கடலைச்சூழ்ந்து இரண்டுநூறாயிரம் யோசனை விரிவுடையது சாகத்தீவு. இது சாகமென்னும் மரத்தாற்பெற்றபெயர். அந்தச்சாகத்தீவைச்சூழ்ந்து அத்துணைப்பரப்புடையது பாற்கடல். அதனைச்சூழ்ந்து நான்குநூறாயிரம் யோசனைப்பரப்புடையது குசத்தீவு. இது பிரமன் வேள்விசெய்யுங்கால் ஆண்டுப் பொன்மயமாய் முளைத்த குசப்புல்லாற் பெற்ற பெயர். அந்தக்குசத்தீவைச் சூழ்ந்து அத்துணைப் பரப்புடையது தயிர்க்கடல். அத்தயிர்க்கடலைச்சூழ்ந்து எட்டுநூறாயிரம் யோசனைப்பரப்புடையது கிரௌஞ்சத்தீவு. அஃதாண்டுக் கிரௌஞ்சமென்னும் வரையிற் கிரௌஞ்சனென்னும் அவுணன் அறுமுகக்கடவுளொடு பொருது மடிந்தமையின் அவனாற்பெற்றபெயர். அந்தக் கிரௌஞ்சத்தீவைச்சூழ்ந்து அத்துணை விரிவுடையது நெய்க்கடல். அந்த நெய்க்கடலைச் சூழ்ந்து பதினாறுநூறாயிரம் யோசனை விரிவுடையது சான்மலித்தீவு. அஃது ஆண்டுப் பொன்மயமாய் ஆயிரம்யோசனையளவு வளர்ந்துநிற்குஞ் சான்மலியென்னும் மரத்தாற் பெற்ற பெயர். அந்தச் சான்மலித்தீவைச்சூழ்ந்து அத்துணைவிரிவுடையது கருப்பஞ்சாற்றுக்கடல். அதனைச்சூழ்ந்து முப்பத்திரண்டு நூறாயிரம்யோசனைப் பரப்புடையது கோமேதகத்தீவு. அஃது ஆண்டு மனுமாபிற்றோன்றிய கோபதியென்னும் வேந்தன் * கோசவமென்னும் வேள்விசெய்வான்றொடங்கியவழி, உசத்தியன் மாபிற்றோன்றுங் கௌதமனாகிய தன்னாசிரியன் வாசவனை வேட்பித்தற்பொருட்டுச் சென்றானாகப், பிருகுவைத்தனக்காசிரியனாகக்கொண்டு வேள்விசெய்புங்கால், அஃதறிந்துவந்து சபித்த கௌதமன் கோபத்தீயானே வேள்விச்சாலையினின்ற கோக்களெல்லாம் வெந்தழிய, அவற்றின்மேதை அந்நிலமுழுது நிறைந்தமையாற் பெற்றபெயர். அத்தன்மைத்தாகிய கோமேதத்தீவைச்சூழ்ந்து அத்துணைப் பரப்புடையது மதுக்கடல். அக்கடலைச் சூழ்ந்து அறுபத்துநான்கு நூறாயிரம் யோசனைவிரிவுடையது புட்கரத்தீவு. அஃது ஆண்டுளதாகிய புட்கரணியென்னு நதியாற் பெற்றபெயர். அந்தப் புட்கரத்தீவைச்சூழ்ந்து அத்துணைப் பரப்புடையது சுத்தநீர்க்கடல்.

இவ்வேழு பெருந்தீவில் நாவலந்தீவொழிந்த ஆறுதீவினுமுள்ளார் இளாவிரத முதலியவற்றின் வாழ்வோர்போல நால்வகை யுகங்களான்வரும் அவத்தை வேறுபாடின்றி என்றும் ஒருதன்மையராய்ப் பால் முதலிய உணவுகளையுண்டு பதினாயிரமாண்டு நிலைபெறுவர்.

இங்ஙனம் நாவலந்தீவின் நடுத்தொடங்கிச் சுத்தநீர்க்கடல்வரையின் இரண்டுகோடியே ஐம்பத்துமூன்றிலக்கத்து ஐம்பதினாயிரம் யோசனை யென்றறிக.

இனி, சுத்தநீர்க்கடலைச் சூழ்ந்து கனகமயமாய் மாணிக்கம்முதலிய பல வேறுவகைப்பட்ட மணிகளையெல்லாமுடைத்தாய் வயங்குவதாகிய பொன்னிலம் பத்துக்கோடியோசனை யுடைத்து. ஆண்டுக் கடவுளர் வந்து விளையாடி வாழ்ந்து தத்தமுலகிற்கேகுவர்.

* கோசவமென்னும் வேள்வி - கோமேதயாகம்.

இந்தப் பொன்னிலத்தைச்சூழ்ந்து லோகாலோகமெனுஞ் சக்கரவாள கிரி பதினாயிரம்யோசனைப் பரப்புடைத்தாய்நிற்கும். இப்பக்கத்தின் ஒளியும் அப்பக்கத்தின் இருளுமுடைமையான் அஃது லோகாலோகமலையெனப் பெற்றது. அந்த மலையின்புறத்தைச்சூழ்ந்து இருண்மயமாய்த் துன்னியநிலம் முப்பத்தைந்துகோடியே பத்தொன்பது நூறாயிரத்து நாற்பதினாயிரம் யோசனைப் பரப்புடைத்து. இது வெகுளிமுதலியவற்றாற் றம்முயிரைவீட்டினோர் பேய்வடிவெடுத்துழன்று துன்பமுற்றலையுமிடம்.

அவ்வந்தகாரநிலத்தைச் சூழ்ந்து கோடியே இருபத்தேழுநூறாயிரம் யோசனைப்பரப்புடையது நாயகக்கடலாகிய பெரும்புறக்கடல். அதனைச் சூழ்ந்த அண்டச்சுவர்க்கனங் கோடியோசனையாகச் சம்புத்தீவின் மேருவரைநிற்கும்நடுநிலம்முதல் அண்டகடாகமீறாக எத்திசையினும் ஐம்பது கோடியோசனைப் பரப்புடைய பூலோகத்தினளவு நூறுகோடியோசனை கண்டுகொள்க.

இத்தன்மைத்தாகிய பூலோகத்தின்மேல் வாயுமண்டலம், மேகமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம் முதலாகத் துருவமண்டலங்காறும் புவலோகம். அது பதினைந்து நூறாயிரம்யோசனை உயரமுடைத்து.

அதன்மேல் இந்திரன் முதலியோர் வைகுஞ் சுவலோகம் எண்பத்தைந்து நூறாயிரம் யோசனையுயரமுடைத்து. அதன்மேல் மரீசிமுதலிய முனிவர் வைகும் மகலோகம் இரண்டுகோடியோசனை யுயரமுடைத்து. அதன்மேற் றென்புலத்தாரும் சன்னுமுதலிய முனிவர்கணங்களும் வைகுஞ் சனலோகம் எட்டுக்கோடியோசனை யுயரமுடைத்து. அதன்மேற் சனகன் முதலியோர் வைகுந் தபலோகம் பன்னிரண்டுகோடியோசனை யுயரமுடைத்து. அதன்மேற் பிரமன்வீற்றிருக்குஞ் சத்தியலோகம் பதினாறுகோடியோசனை யுயரமுடைத்து. அதன்மேற் செங்கண்மாலுலகம் நாலுகோடியோசனை யுயரமுடைத்து. அதன்மேல் உருத்திரலோகம் ஆறுகோடியோசனை யுயரமுடைத்து. அதன்மேல் அண்டச்சுவர்க்கனங்கோடியோசனை யுயரமுடைத்து.

ஆகப் பூலோகத்தின்மேல் அண்டகடாகம்வரையின் ஐம்பதுகோடியோசனை. பூலோகத்தின்கீழ்க்கூறிப்போந்த ஐம்பதுகோடியோசனையுமுள்படப் பிரமாண்டத்தினளவு நூறுகோடியோசனையுங் கண்டுகொள்க. இது * மிருகேந்திரத்திற்கண்டது. கற்பந்தோறும் படைப்புவேறுபடுதல்பற்றி ஆகமங்களிற் பிரமாண்டத்தின் வகையளவு சிறுபான்மை ஒன்றற்கொன்று வேறுபடக்கூறப்படுமாயினும், தொகையளவு நூறுகோடி யோசனையென்பது எல்லாவாகமங்கட்குந் துணிபெனக்கொள்க.

இத்தன்மையவாகிய சாதாரணப்புடவிதத்துவமென்னும் அண்டங்கள் ஆயிரகோடியுள. அவையெல்லாம் இவ்வாறே காலாக்கினிருத்திரலோகம் முதல் உருத்திரலோகமீறாகிய உலகங்களும் வளங்களும் நூறுகோடியோசனையளவும் ஒப்பவுடையனவாய் விளங்கனிவடிவினவாய் வயங்கும்.

---

* மிருகேந்திரத்தில் அத்துவப்பிரகரணத்திலே ஆறாஞ் சுலோகம் தொடங்கிக் காண்க.

இந்தச் சாதாரணப்புடவிதத்துவமாகிய அண்டத்தினப்புறத்தே பத்துத் திசையினுங் காவல்பூண்டுவைகும் உருத்திரர் ஒவ்வொருதிசைக்குப் பதின்மராக நூற்றுவரும், அண்டத்தினுள்ளாகக் கீழும் மேலும் அறுவரும், எல்லார்க்கும் மேலாக இருவருமாக நூற்றெட்டுருத்திரர் உளர். அவரவர்வைகும் புவனங்களும் அவரவர்பெயரானே வழங்கப்படும். அவையாவன:—

அண்டத்தினுள்ளாகக் கீழே காலாக்கினியுருத்திரர்புவனம் கூஷ்மாண்டபுவனம், ஆடகேசபுவனம் எனவும், மேலே பிரமம் வைணவம் உருத்திரமெனவுங் கூறப்படும் புவனங்களாறு. வெளியிலொன்றுக்கு மேலொன்று கிழக்கு மேற்கு எல்லாவற்றிற்கு மேலு மாயோன் பிரமா உருத்திரரிற் கீழ்பாலிந்திரதிசையிற் கபாலீசன், அசன், புத்தன், வச்சிரதேகன், பிரமத்தனன், விபூதி, அவ்வியயன், சாத்தன், பிஞுகி, திரிதசாதிபன் எனப் பத்துருத்திரர் இந்திரனைக் கீழ்த்திசைக்குக் காவலினியமித்து வைகும் புவனங்கள் பத்து. மேலும் அவ்வத்திசையிற் கூறப்படும் உருத்திரர் அவ்வத் திசைக் காப்பாளராகிய அங்கியங்கடவுண் முதலியோரை அவ்வத்தொழிலினியமித்து அவர் வழிபட வீற்றிருப்பரென்றறிக. தென்கீழ்பால் அங்கிதிசையின் அங்கி, உதாசனன், பிங்கலன், காதகன், அரன், சுவலனன், தகனன், பப்புரு, பற்பாந்தகன், கயாந்தகன் என்னு முருத்திரர் வைகும் புவனம் பத்து. தென்பால் இயமன்றிசையில் யாமியன், மிருத்தியு, அரன், தாதா, விதாதா, கருத்தா, சையோத்தா, வியோத்தா, தருமபதி, அதருமபதி என்னும் உருத்திரர் புவனம் பத்து. இதன்மேல்பால் நிருதியில் நிருதி, மாரணன், அந்தா, குரூரதிட்டி, பயாந்தகன், ஊர்த்துவலிங்கன், விரூபாக்கன், தூமிரன், உலோகிதன், தமுட்டிரி என்னும் உருத்திரர் வைகும் புவனம்பத்து. மேல்பால் வருணதிசையின் பெலன், அதிபெலன், பாசவத்தன், மாபெலன், சுவேதன், செயபத்திரன், தீர்க்கவாகு, சலாந்தகன், மேகனுதன், சுனுதன் என்னும் உருத்திரர் வைகும் புவனம்பத்து. வடமேல்பால் வாயுதிசையின் சீக்கரன், இலகு, வாயுவேகன், சூக்குமன், தீக்கணன், கயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கவத்தி, மேகவாகனன் என்னு முருத்திரர் வைகும் புவனம்பத்து. வடபாற் குபேரனும் சோமனும் வைகுந் திசையின் நிதீசன், உரூபவான், தன்னியன், சவுமியதேகன், சடாதரன், இலக்குமிதரன், அரதனதரன், சிரீதரன், பிரசாதன், பிரகாமதன் என்னும் உருத்திரர் வைகும் புவனம்பத்து. வடகீழ்பால் ஈசானன்றிசையின் வித்தியாதிபன், ஈசன், சர்வஞானன், ஞானபுக்கு, வேதபாரகன், சுரேசன், சருவன், சேட்டன், பூதபாலன், பெலிப்பிரியன் என்னும் உருத்திரர் வைகும் புவனம்பத்து. மேல்வெளியில் கீழ்க்கண்ணதாகிய மாயோன்றிசையின் இடபன், இடபதான், அனந்தன், குரோதன், மாருதாசனன், கிரசனன், உதும்பரேசன், பணீந்திரன், வச்சிரன், தமுட்டிரி என்னும் உருத்திரர் வைகும் புவனம்பத்து. மேற்கண்ணதாகிய பிரமன்றிசையிற் சம்பு, விபு, கணுத்தியக்கன், திரியக்கன், திரிதசேசன், சம்வாகன், விவாகன், நபன், இலீச்சு, திரிலோசனன் என்னும் உருத்திரர் புவனம்பத்து. எல்லாவற்றிற்கும் மேலாக வீரபத்திரன் பத்திரகாளி என்னும் இவர்வைகும் புவனம் இரண்டு. ஆகச் சாதாரணப் புடவிதத்துவத்திற் புவனம் நூற்றெட்டுங் கண்டுகொள்க.

இந்த நூற்றெட்டுப் புவனமும் பிருதிவியண்டமாயிரகோடியினும் இவ்வாறே வேறு வேறுள்ளன.

இவ்வண்டம் சுருங்கிய வடிவிற்றாகிய அடித்தலத்தில் தாமதமும் மேலே சற்றுவிரிவுடைத்தாகிய முகத்தில் இராசதமும் அவ்விரண்டுங்கூடும் நடுத்தலத்தில் சாலவும் விரிவுடைமையால் சாத்துவிகமும் என மூவகைத்தாம்.

இத்தன்மைத்தாகிய பார்த்திபமண்டிலம், ஐவகைவடிவின் நாற்கோண வடிவும், ஐவகைக்குறியின் வச்சிரக்குறியும், ஐவகைநிறத்திற் பொன்னிறமும், இருவகைப் பத்துப்பீசத்தின் அகரம் லகரம் என்னும் இரண்டு பீசங்களும், பத்துவகைநாடியின் இடைபிங்கலையென்னும் இரண்டு நாடியும், தசவாயுக்களிற் பிராணன் அபானன் என்னும் இரண்டுவாயுவும், இருவகைப்பத்திந்திரியங்களின் ஆக்கிராணமும் உபத்தமும் என்னும் இரண்டிந்திரியங்களும், ஐவகை விடயத்திற் கந்தமும் கந்தமுதற் சத்தமீறாகிய ஐந்துகுணமும், ஐவகையவத்தையிற் சாக்கிரமுமுடைத்தாய், விலங்கு பறவை பசு பாம்பு தாபரம் மானிடம் பைசாசம் இராக்கதம் இயக்கம் காந்தருவம் ஐந்திரம் சௌமியம் பிராசாபத்தியம் பிரமம் என்னும் பதினால்வகையோனிக்கும் இடமாய் நிற்கும். இதற்கு அதிதெய்வம் பிரமன். இதற்கு இலயத்தானம் மூலப்பகுதி. போகத்தானம் புத்தி. ஏனை அத்துவாக்கட்குரிய நிறம், குறி, வடிவு, பீசம், நாடி, வாயு, இந்திரியம், விடயம், குணம், அதிதெய்வம் முதலாயினவும் இம்முறையேபற்றி உணர்ந்துகொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனிப் புவனங்களிற் புவனபதிகளினிடமாக நிலைபெறும் அக்கரங்கள் ஐம்பத்தொன்றின் ளகாரத்தினிறுதிக்கணின்ற உடலெழுத்தொன்றும், அவ்வக்கரங்களால் இயன்ற பதங்களெல்லாம் அவற்றிற்கு மூலமாகிய எண்பத்தொரு பதத்தின் இறுதிக்கணின்ற பதமுதல் இருபத்தெட்டுப்பதமும், பதங்களாலியன்ற மந்திரங்களெல்லாம் அவற்றிற்கு மூலமாகிய பதினொருமந்திரத்தின் இருதயம் சத்தியோசாதம் என்னும் இரண்டு மந்திரமும் இதன்கண் அடங்கும்.

இவையெல்லாமுடைத்தாய் ஈண்டுக் கூறிப்போந்த புடவிதத்துவத்தை அடக்கிநிற்பது நிவிர்த்திகலை. இனிச் சாதாரணமான அப்புதத்துவவண்டம் பிருதிவியண்டத்தளவிற் பதிற்றுமடங் கேற்றமாகிய ஆயிரகோடியோசனை மானமுடைத்து; அவ்வண்டங்களும் எண்ணிறந்தன. இவ்வாறே சாதாரணத்தேயுதத்துவமுதற் சாதாரண மூலப்பகுதிதத்துவங்காறுங் கீழ்க்கீழண்டத்தை நோக்கி மேன்மேலண்டம் பப்பதிற்று மடங்கள வேற்றமாகவுடையன வெனக்கொள்க.

அத்தத்துவங்களாவன:— புடவிதத்துவமொழித்தொழிந்த பூதங்கள் நான்கும், தன்மாத்திரை ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், மனமாதி அந்தக்கரணங்கள் மூன்றும், அவ்வியத்தமும் என்னும் இருபத்து மூன்றுமாம். சித்தம் மனத்தினுங் குணதத்துவம் அவ்வியத்தத்தினும் அடங்குமாகலின் இருபத்து மூன்றென்னுந்தொகைக்கு இழுக்கின்மை அறிக.

அவற்றுள் அப்புவண்டத்தின் அமரேசம், பிரபாசம், நைமிசம், புட்கரம், ஆசாடி, திண்டி, பாரபூதி, லகுளீசமாகிய குய்யாட்டக புவனமெட்டு.

தேயுவண்டத்தின் அரிச்சந்திரம், சீசயிலம், செற்பேசம், ஆமிராதகம், மத்திமேசம், மகாகாளம், கேதாரம், வைரவமாகிய அதிகுய்யாட்டகமென்னும் புவனமெட்டு.

வாயுவண்டத்தின் கயை, குருக்கேத்திரம், நாகலம், நகலம், விமலம், அட்டகாசம், மயேந்திரம், பீமேசமாகிய குய்யதாராட்டகமென்னும் புவனங்களெட்டு.

ஆகாயவண்டத்தின் வத்திரபதம், உருத்திரகோடி, அவிமுத்தம், மகாலயம், கோகர்ணம், பத்திரகர்ணம், சுவனுக்கம், தாணுவாகிய பவுத்திராட்டகமென்னும் புவனமெட்டு.

தன்மாத்திரை ஐந்தும், இந்திரியம் பத்தும், மனமுமென்னுந் தன்காரியமாகிய பதினாறண்டங்களையுந் தன்னுள் அடக்கிநிற்கும் ஆங்காரவண்டத்திற், சகலண்டம், துவிரண்டம், மாகோட்டம், மண்டலேச்சுரம், காளாஞ்சரம், சங்குகன்னம், தூலேச்சரம், தலேச்சரமாகிய தாணுவட்டகமென்னும் புவனமெட்டு.

புத்தியண்டத்திற் பைசாசம், இராக்கதம், இயக்கம், காந்தருவம், மாகேந்திரம், சௌமியம், பிராசேசம், பிராமமாகிய சூக்குமபுவனாட்டகமெட்டு.

பிரகிருதியண்டத்தின் அகிருதம், கிருதம், வைரவம், பிராமம், வைணவம், கௌமாரம், அவுமம், சிரைகண்டம் என்னும் யோகாவட்டக புவனமெட்டு.

ஆக அப்புதத்துவமுதல் மூலப்பகுதியீறாகிய அண்டங்களைக்காக்கும் உருத்திரர் வைகும் புவனம் ஐம்பத்தாறு. இந்தப்புவனங்களிற் புவனபதிகளிடமாக நிலைபெறு மக்கரங்கள் சங்காரமுறையின் ளகரமுதல் டகாமீறாகிய இருபத்துநான்கு; ளகரத்தை லகரத்துளடக்கி இருபத்துமூன்றென்றலுமொன்று. ஈண்டடங்கும் பதங்கள் சங்காரமுறையின் இருபத்தெட்டுக்கு மேலுளவாகிய இருபத்தொருபதம்.

மந்திரம் சிரமும் வாமதேவமுமென இரண்டு; இவையெல்லாமுடைய அப்புதத்துவமுதல் மூலப்பகுதியீறாகிய இருபத்துமூன்று தத்துவங்களும் பிரதிட்டாகலையிலடங்கும். இனி மூலபகுதிக்குமேற் புருடதத்துவமுதல் மோகினியீறாகிய ஏழுதத்துவங்களும் கீழ்க்கீழ்த்தத்துவங்களை நோக்கி மேன்மேல் நூறு நூறு மடங்கு பிரமாணம் ஏற்றமாகவுடையன.

அவற்றுட் புருடதத்துவத்தின் வாமன், பீமன், உக்கிரன், பவன், ஈசானன், ஏகவீரன் என்னும் உருத்திரர் புவனம் ஆறு.

அராகதத்துவத்தில் பிரசண்டன், உமாபதி, அசன், அனந்தன், ஏகசிகன் என்னும் உருத்திரர் புவனம் ஐந்து.

நியதியிற் குரோதன், சண்டன், சமுவத்தன், சோதி, சூரன் என்னும் உருத்திரர் புவனம் ஐந்து.

வித்தையிற் பஞ்சாந்தகன், ஏகவீரன் என்னும் உருத்திரர் புவனம் இரண்டு.

காலத்தின் வாமதேவன், பவன் என்னும் உருத்திரர் புவனம் இரண்டு.

மாயையின் உற்பலன் ஏகபிங்கலன், ஏகேக்கணன், ஈசானன், அங்குட்டமாத்திரன் என்னும் உருத்திரர் புவனம் ஐந்து.

ஆகத் தத்துவமேழினும் அடங்கும் புவனம் இருபத்தேழு. இந்தப்புவனங்களிற் புவனபதிகளிடமாய் நிலைபெறும் அக்கரம் சங்காரமுறையின் ஞகாமுதற் சவ்வருக்கத்தின் நான்காமெழுத்தீறாக ஏழக்கரம். பதங்கள் சங்காரமுறைமையின் இருபத்தெட்டும் இருபத்தொன்றுமாகிய நாற்பத்தொன்பதிற்குமேலுள்ள இருபதுபதங்கள். மந்திரம் சிகையும், அகோரமுமென இரண்டு. இவையெல்லாமுடைய இவ்வேழுதத்துவமும் வித்தியாகலையிலடங்கும். இனி இவ்வேழுக்குமேலாகிய சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியமென்னும் மூன்று தத்துவங்களும் கீழ்க்கீழ்த் தத்துவங்களை நோக்கி மேன்மேல் ஆயிரமடங்கு பிரமாணம் ஏற்றமாகவுடையன.

இவ்வண்டங்களுட் சுத்தவித்தையின் வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பெலவிகாணி, பெலப்பிரதமனி, சர்வபூததமனி, மனோன்மணி என்னும் நவசத்திகள் புவனம் ஒன்பது.

ஈசுரதத்துவத்தின் அனந்தன், சூக்குமன், சிவோத்தமன், ஏகநேத்திரன், ஏகருத்திரன், திரிமூர்த்தி, சிகண்டன், சீகண்டி என்னும் அட்டவித்தியேசுரர் புவனம் எட்டு.

சதாசிவதத்துவத்திற் சதாசிவபுவனம் ஒன்று. ஆகத்தத்துவ மூன்றினுமடங்கும் புவனம் பதினெட்டு. ஈண்டுப் புவனபதிகளிடமாக நிலைபெறும் அக்கரம் கவ்வருக்கத்தின் நான்காவதொழித்தொழிந்த மூன்றுமாம். பதங்கள் சங்காரமுறையின் நாற்பத்தொன்பதிற்குமேல் வியோமவியாபியீறாகிய பதினொருபதம். மந்திரம் தற்புருடம் கவசம் இரண்டு. இவையெல்லாமுடைய இம்மூன்று தத்துவமுஞ் சாந்திகலையிலடங்கும்.

இனிச் சத்திதத்துவம் சிவதத்துவமிரண்டும் கீழ்க்கீழ்த் தத்துவப்பிரமாணத்தை நோக்கி நூறுயிரமடங்கு பிரமாணம் ஏற்றமாகவுடையன. அவற்றுட் சத்திதத்துவத்தின் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை என்னும் புவனம் ஐந்து.

சிவதத்துவத்தின் இந்திகை, தீவிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகாமினி, வியாபினி, வியோமரூபை, அனந்தை, அநாதை, அநாசிருதை என்னும் புவனம் பத்து. ஆகத் தத்துவமிரண்டினுமடங்கும் புவனம் பதினைந்து. ஈண்டுப் புவனபதிகளிடமாக நிலைபெறும் அக்கரம் அகரமுதலிய உயிர்பதினாறு. பதம் சங்காரமுறையின் இறுதிக்கண்ணதாகிய ஓமென்பதொன்று. மந்

திரம் ஈசானமும், அத்திரமும், மூலமந்திரமுமென மூன்று. இவையெல்லாமுடைய இவ்விரண்டு தத்துவமுஞ் சாந்தியாதீதகலையிலடங்கும். இங்ஙனம் நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளிலடங்கும் மூவகையான்மாக்களுந் தத்தமக்குரிய காரணரூபமுஞ் சூக்குமதேகரூபமுமாகிய சிறப்புத்தத்துவங்களோடுந் தூலரூபமாகிய பொதுச்சிறப்புத் தத்துவங்களோடுங் கூடிப் போக்குவரவு செய்தற்கும் போகநுகர்ச்சிக்குமிடமாய்ப் புவனமுதலிய அத்துவாக்களனைத்தையுந் தம்முளடக்கிநிற்பனவாகிய நிலமுதல் நாதமீறான சாதாரண தத்துவங்களுக்களவும் அவற்றினியல்புகளும் ஒருவாற்றாற்றொகுத்துக் கூறப்பட்டன.

சகலர் போக்குவரவுசெய்து போகநுகர்தற்கிடமாகிய அண்டத்தினியல்பே ஈண்டெடுத்துக் கொண்டதாயினும் இனமாதல்பற்றி ஏனையவும் உடன் கூறப்பட்டன வென்றுணர்க.

ஈண்டுப் பதிற்றுமடங்கேறுமெனப்பட்ட எண்களையறியுமாறு:— ஒன்று பதிற்றுமடங்காயது பத்து; தசமென்பதுமிது. அதற்குப் பத்தாந்தானம் நூறு; சதமென்பதுமிது. அதற்குப் பத்தாந்தானம் ஆயிரம்; சகத்திரமென்பதுமிது. அதற்குப்பத்தாந்தானம் பதினாயிரம்; அயுதமென்பதுமிது. அதற்குப் பத்தாந்தானம் நூறாயிரம்; இலக்கம், நியுதமென்பனவுமிது. அதற்குப் பத்தாந்தானம் பத்திலக்கம். அதற்குப்பத்தாந்தானம் கோடி. அதற்குப் பத்தாந்தானம் அற்புதம். அதற்குப் பத்தாந்தானம் பதுமம். அதற்குப் பத்தாந்தானம் கருவம். அதற்குப் பத்தாந்தானம் நிகருவம். அதற்குப் பத்தாந்தானம் பிருந்தம். அதற்குப் பத்தாந்தானம் மாபதுமம். அதற்குப் பத்தாந்தானம் சங்கம். அதற்குப் பத்தாந்தானம் மாசங்கம். அதற்குப் பத்தாந்தானம் சமுத்திரம். அதற்குப் பத்தாந்தானம் மாசமுத்திரம். அதற்குப் பத்தாந்தானம் மத்தியம். அதற்குப் பத்தாந்தானம் பரார்த்தம். இங்ஙனம் ஒன்றுமுதற் பரார்த்தமீறாகிய இருபது தானமுங் கண்டுகொள்க.

இனிக் குணதத்துவங்காறும் பதிற்றுமடங்கேற்றமாம். மூலப்பகுதி குணதத்துவத்தைநோக்க நூறுமடங்குயோசனை யேற்றமாகவுடைத்தென்றுஞ், சத்திதத்துவத்தை நோக்கச் சிவதத்துவ மளவிடப்படாத வெல்லையுடைத்தென்றுங், குணதத்துவத்திற்குமேல் மூலப்பகுதி முதலியவற்றினீண்டுக் கூறியனவேயன்றி இன்னுஞ் சிலபுவனங்களுளவென்றும், உளவாகவே அவையுமுள்படப் புவனாத்துவா இருநூற்றுமுப்பத்தாறுமென்றும், ஐம்பத்தோரக்கரங்களின் ளகரம் லகரத்துளடங்கு மென்பதுபற்றி வன்னாத்துவா ஐம்பதென்றும், பதமெண்பத்தொன்றினும் சிலவற்றைத் தம்முள் வேறுவைத்தெண்ணிப் பதாத்துவாத் தொண்ணூற்று நான்கென்றும், பீசமொன்றுதல் பற்றி மூலமந்திரத்து ளடங்குவதாகிய நேத்திரத்தை வேறுவைத்தெண்ணி மந்திராத்துவாப் பன்னிரண்டென்றுஞ் சிலவாகமங்களிற் கூறப்படும்.

மூலப்பகுதி முதலியவற்றின் வேறுஞ் சிலபுவனங்களுளவென்பது மிருகேந்திரத்திற் கூறப்பட்டது; அது ஞானமிர்தத்தினுங் காண்க.

அற்றேல் நிருவாணதீக்கையின் அத்துவசுத்தி செய்தற்கண் மலைவாம் பிறவெனின் ஆகாது; அவ்வவ்வாகமவழிநின்றோரான் அவ்வாகமத்திற் கூறியவாறே சுத்திசெய்யப்படு மாகலானென்க.

அற்றாயினும் அண்டங்களுக்கு அளவும் ஆண்டுள்ள பொருள்களும் ஆண்டாண்டைக்குரிய புவனங்களுஞ் சிறுபான்மை தம்முள் வேறுபடக் கூறும் ஆகமங்கள் ஒன்றனோடொன்று முரணுமாலோவெனின், முரணாது; என்னை? கற்பந்தோறும் படைப்புவேறுபாடுடைமையின் அவ்வேறுபாடு பற்றி அவை அங்ஙனம் வேறுபடக்கூறுதல் பொருந்து மாகலானென்பது.

ஈண்டு அத்துவாக்களாறனுட் கலாத்துவா நிவிர்த்திமுதற் சாந்தியாதீதையீறாகவும், தத்துவாத்துவா நிலமுதற் சிவமீறாகவும், புவனாத்துவா காலாக்கினியுருத்திரபுவனமுதல் அனாசிருதபுவனமீறாகவும், வன்னாத்துவா ளகாரத்தின் அயனின்ற வெழுத்துமுதல் அகரமீறாகவும், பதாத்துவா ஓம் நமவோவென்பதுமுதல் வியோமவியாபி ஓம் என்னும் பதமீறாகவும், மந்திராத்துவாவிற் பஞ்சப்பிரமங்கள் சத்தியோசாதமுதல் ஈசானமீறாகவும் அங்கங்களின் இதயமுதல் அத்திரமீறாகவும்வைத்துக்கூறியது ஒடுங்கு முறைபற்றியெனவும், இனித் தோன்று முறைப்பற்றிக் கலாத்துவாச் சாந்தியாதீதைமுதல் நிவிர்த்தியீறாகவும், தத்துவங்கள் சிவமுதல் நிலமீறாகவும், புவனங்கள் அனாசிருதபுவனமுதற் காலாக்கினியுருத்திரபுவனமீறாகவும், வன்னங்கள் அகரமுதல் ளகாரத்தினயனின்ற வெழுத்தீறாகவும், பதங்கள் ஓம் வியோமவியாபியென்னும் பதமுதல் நமோநம ஓம் என்பதீறாகவும், மந்திரங்களிற் பிரமம் ஈசான மூர்த்திமுதற் சத்தியோசாதமீறாகவும் அங்கம் அத்திரமுதலிதயமீறாகவுங் கூறப்படுமெனவுந் தெரிந்துகொள்க. அத்துவாவெனினும் வழியெனினு மொக்கும்.

இவையோரோவொன்றாகக் கழித்துக்கொண்டு சிவபதத்திற் சேறற்கு வழிபோறலின் அத்துவாவெனப்பட்டன. தத்துவ முதலைந்தினையுந் தம்முளடக்கிநிற்கும் பஞ்சகலைகள் திரோதாயிரூபமாய்நின்ற சிவசத்தியிலடங்கும்; சிவசத்தி சிவன்கணடங்கும் என்றுணர்க.

பிரமாண வோத்தினிரண்டாம் பாதமாகிய இரண்டாஞ் சூத்திரத்தில் மூன்றாமதிகரணம் முடிந்தது.